## சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளின் இயக்ககத்திலிருந்து 3–ஆம் நிலை நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பணியிடங்கள் பேரூராட்சிகள் துறைக்கு மீள ஒப்படைப்பு செய்தது – 01.10.2009 முதல் 31.03.2011 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை

அரசாணை (ப) எண். 267 நாள்: 31.05.2010

படிக்க:

சிகள் இயக்கக
3 JUN 2010
சென்னை

1. அரசாணை (நிலை) எண்.301, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.08.2004.
2. அரசாணை (ப) எண்.68, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.02.2009.
3. அரசாணை (2ப) எண்.128, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.12.2009.
4. அரசாணை (ப) எண்.25, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.01.2010.
5. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண். 25512/01/ இ1, நாள் 19.02.2010.

****

**ஆணை:**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளின் வகைப்பாட்டினை தொடர்ந்து 50 பேரூராட்சிகள் 3–ம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டதில் 3–ம் நிலை நகராட்சிகளின் நிர்வாகத்தினை கவனிக்கும் பொருட்டு பேரூராட்சிகள் இயக்ககத்திலிருந்து ஒரு இணை இயக்குநர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் பணியிடங்களையும் சேர்த்து 13 பணியிடங்கள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

2. இந்நிலையில் பேரூராட்சிகள் நிர்வாகத்தில் பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது எனவும், இப்பணிகளை மாநில அளவில் தலைமையிடமாக செயல்பட்டு வரும் பேரூராட்சிகள் இயக்ககத்தில் இணை இயக்குநர் (திட்டம்) மற்றும் உதவி இயக்குநர் (திட்டம்) ஆகிய பணியிடங்கள் இருந்தால் பேரூராட்சிகள் இயக்கக பணிகள் தங்குதடையின்றி துரிதமாக நடைபெறவும், திட்டப்பணிகளை சிறந்த முறையில் செயல்படுத்திடவும் உறுதுணையாக இருக்கும் என்பதால் பேரூராட்சிகள் இயக்ககத்திலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணியிடங்களில் ஒரு இணை இயக்குநர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் பணியிடங்களை பேரூராட்சிகள் துறைக்கு மீள ஒப்படை செய்திட அரசை கோரியதை தொடர்ந்து மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசாணையில் நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் இருந்த இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பணியிடங்களை பேரூராட்சிகள் துறைக்கே மீள ஒப்படைப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்று பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலே 5–ல் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதத்தில், பேரூராட்சிகள் துறையிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மேற்காண் 13 பணியிடங்களின் தொடர் நீட்டிப்பானது நகராட்சி நிர்வாக ஆணையர் வழி பெறப்பட்டுள்ளது என்றும் அதன்படி பரிசீலிக்கப்பட்டதில் பேரூராட்சிகள் இயக்ககத்திலிருந்து ஒப்படைக்கப்பட்ட 13 பணியிடங்களுக்கு தொடர்

அனுமதியானது மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி 01.10.2008 முதல் 30.09.2009 வரை தொடர் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து மேற்காண் 13 பணியிடங்களுக்கு 01.10.2009 முதல் 30.10.2010 வரை தொடர் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரகம் வழி கருத்துரு அனுப்பப்பட்டதில், மேற்காண் 13 பணியிடங்களில் இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பணியிடங்கள் மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி பேரூராட்சிகள் துறைக்கு மீள ஒப்படைப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளதால், அவ்விரு பணியிடங்கள் நீங்கலாக ஏனைய 11 பணியிடங்களுக்கு 01.10.2009 முதல் 30.09.2010 வரை நகராட்சி நிர்வாக துறையில் நீடிக்க தொடர் அனுமதி வழங்கி மேலே 4–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும் ஆதலால் தற்போதைய சூழ்நிலையில் அரசால் தொடர் அனுமதி வழங்கப்படாத பேரூராட்சிகளின் இயக்ககத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மேற்காண் இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் ஆகிய இரு பணியிடங்களுக்கு அரசாவில் பணியிட தொடர் அனுமதி பெற வேண்டியது அவசியமாகிறது என்றும் எனவே, அரசாணை (2ப) எண். 128 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.12.2009–ன்படி, நகராட்சிகள் நிர்வாக இயக்ககத்திலிருந்து பேரூராட்சிகள் துறைக்கு மீள ஒப்படைக்கப்பட்ட இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு 01.10.2009 முதல் 31.03.2011 வரையிலான காலத்திற்கு பணியிட தொடர் அனுமதியும் மற்றும் இப்பணியிடங்களுக்கு கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சம்பளம் மற்றும் இதர படிகளை வழங்குவதற்கு உரிய ஆணை வழங்குப்படி கேட்டுக் கொண்டுள்ளார்:-

" 2515 – 00 ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள் 001 – நெறிபடுத்துதலும் நிருவாகமும் – 1. திட்டத்தில் சேராதது A1 - பேரூராட்சிகள் இயக்ககம் – 01 சம்பளங்கள். (DPC No. 2515 - 00 001 - A1 - 0104). "

4. மேற்கூறிய சூழ்நிலையில், பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, நகராட்சிகள் நிர்வாக இயக்ககத்திலிருந்து, பேரூராட்சிகள் இயக்ககத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்ட இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு 01.10.2009 முதல் 31.03.2011 வரை தொடர் அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளை "2515 – 00 ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள் 001 – நெறிபடுத்துதலும் நிருவாகமும் – 1. திட்டத்தில் சேராதது A1 - பேரூராட்சிகள் இயக்ககம் – 01 சம்பளங்கள். (DPC No. 2515 - 00 001 - A1 - 0104)" என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.13596/ந.நி.(ம)கு.வ./2010, நாள் 17.05.2010–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –108.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (வடக்கு), சென்னை 600 001.
மாநில தலைமை கணக்காயர், சென்னை 18.
நகல்:
நிதித்துறை, சென்னை –9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.II) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

2/6/10
பிரிவு அலுவலர்.